

மயிலாடுதுறை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (21.06.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் .செ.இராமலிங்கம் , பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் .நிவேதா எம்.முருகன் , சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் .எம்.பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா , மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் கெ.ஞானசேகரன் வரவேற்பில்

# உத்திரமேரூரில் மாபெரும் பொதுக்கூட்டம்: அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

காஞ்சிபுரம் ஜூன் 22-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் - பேரூர் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கம் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (23.6.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, கே.எம். ஆர். பேருந்து நிலையம், உத்திரமேரூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞான சேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பேரூர் கழகச் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை யாற்றுகிறார். மேலும் மாவட்ட துணைச் செயலாளர் க. செல்வம் எம்.பி., இரா. நாகன், டி. குமார், பொ.சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்தி குமார், மா.ஏழுமலை, இளமதி கோவிந்தராஜ், பத்மா பாபு, கோ. காளிதாஸ், ஏ.கே.ரமேஷ் பாபு, டி.கே.கோபாலகிருஷ்ணன், டாக்டர் வி.திவாகர், கே.தயாளன், தே. வீராசாமி, எம்.பி. தாமஸ், ஏ.மூர்த்தி, ஜி.கண்ணாயிரம், லோ.பவ்யா, து.சுந்தர், மு.தாமோ தரன், தா.சுப்பராயன், எஸ்.ருத்திர கோட்டி, த.சுகுணா சுந்தராஜன், ஏ.எம்.கெங்கன், தே.பாபு, டி.எஸ்.குமாரதேவ், இரா.கார்த்திகேயன், கா.மாய கிருஷ்ணன், து.ரமேஷ், ஏ.வீரமணி, ஆ.ஜெய காந்தா, ப.மகேந்திரன், க.அப்துல்ஹக்கீம், வெ. கோவிந்தராஜ், வெ. குணசேகரன், மா.கருணா நிதி, ந.ராஜேந்திரன், ஏ. செல்லமுத்து, வி.ராஜ பாண்டி, ஆ.நீலகண்டன், ஜி.மனோகரன், உள்ளிட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சிப் பிரதிநிதி கள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர். வெ.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.

### பி.எஸ். சந்துரு தலைமை! புழல் எம்.நாராயணன் முன்னிலை! 12 இடங்களில் கழக கொடி ஏற்றி

# மாதவரம் 23வது வட்டத்தில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூன் 22-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி 23வது வட்ட தி.மு.க. சார்பில், 12 இடங்களில் கழகக் கொடி ஏற்றி 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு சீரிய ஒருங்கிணைப்பில், பின்வரும் இடங்களில் கழகக் கொடி ஏற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில், சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ கலந்துகொண்டு கழகக் கொடி ஏற்றி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் 23 அ வட்டச் செயலாளர் வி.ஆர். குப்பன், 23வது வட்ட அவைத் தலைவர் து.எழில் குமார், மு.விக்னேஸ்வரன், மேக்ஸிலா உதயகுமார், சொ.சரவணன், க.சிவகுமார், வே.ரவி, க.ந.க. சைமன் முத்துவேல், நெல்சன் ராஜ், மற்றும் பீர்முகமது, பழனிவேல், தங்கவேல், தீபக், மகி, நடராஜன், கிஷோர், ஜெகன், எம்.பாபு, ராஜா ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்து முன்னிலை வகித்தனர்.

**கிருஷ்ணா நகர்!**

கிருஷ்ணா நகர் பகுதியில் நடந்த கழகக் கொடி ஏற்று நிகழ்ச்சியில் 100 தாய்மார்களுக்கு புடவைகள் வழங்கப்பட்டன. கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பொதுமக்கள் 300 பேருக்கு காலை உணவாக இட்லி, பொங்கல், வடை, கேசரி ஆகியவற்றுடன் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு கழக நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

**தமிழன் நகர்!**

தமிழன் நகர் பகுதியில் வசிக்கக்கூடிய 100 தாய்மார்களுக்கு புடவைகள் வழங்கப்பட்டன. கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி கழகத்தினர் அஞ்சலி செலுத்தினார்கள்.

**மகாவீர் கார்டன்!**

மகாவீர் கார்டன் பகுதியில் 100 தாய்மார்களுக்கு புடவைகள், மதிய உணவாக காய்கறி பிரியாணி, கேசரி உள்ளிட்ட அறுசுவை உணவு 300 பேருக்கு வழங்கப்பட்டது. மேலும் கழகக் கொடியேற்றி அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**மாதா நகர்!**

மாதா நகர் பகுதியில் வசிக்கக்கூடிய 150 தாய்மார்களுக்கு புடவைகள் வழங்கப்பட்டன. கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மேலும் காவாங்கரை பேருந்து நிறுத்தம், பாரதியார் தெரு சந்திப்பு, பெட்ரோல் பங்க் சந்திப்பு, எஸ்.ஆர்.எம். டி.சந்திப்பு, சக்திவேல் நகர் சந்திப்பு, சிவராஜ் தேர்வு சந்திப்பு. காந்தி தெரு சந்திப்பு, புழல் மத்திய சிறைச்சாலை எதிரே, காந்தி தெரு சந்திப்பு ஆக 12 இடங்களில் கழகக் கொடி ஏற்றி 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு லட்டு ஜாங்கிரி உள்ளிட்ட இனிப்புகள் வழங்கப்பட்டது.

அனைத்து இடங்களிலும் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இரண்டு சக்கர வாகனங்களில் கழகக் கொடி ஏந்தி கலைஞர் புகழ் ஓங்குக கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் வாழ்க, இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வாழ்க என்று கோஷம் எழுப்பி கலைஞரின் நூற்றாண்டை சிறப்பாக கொண்டாடினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை 23வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு மற்றும் கழக நிர்வாகிகள் ஒருங்கிணைத்து செய்திருந்த னர். அதனை முன்னிட்டு அனைத்து நிர்வாகிகளையும் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில்

# மாவட்ட, திட்டக்குழு உறுப்பினர்கள் பட்டியல்!

### மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருப்பத்தூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தல் நாளை 23.06.2023 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற உள்ளது. மாவட்ட ஊராட்சி குழு நகராட்சி மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய மொத்தம் 12 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர், அதில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் 8 பேர்களும் மீதி 4 பேர்கள் நகராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இதில் ஊரக பகுதிகளில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் 8 உறுப்பினர் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு உள்ளார்கள். நகர்புற பகுதிகளில் மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்களாக நான்கு பேர் தேர்வு செய்யப்பட உள்ளார்கள்.அதன் விவரம் வருமாறு

**ஊராட்சி பகுதி - மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்**

1. சசிகலா (காங்கிரஸ்)
2. என்.பிரியதர்ஷினி ஞானவேலன் (தி.மு.க)
3. ச.சத்தியவாணி (தி.மு.க)
4. சு.ஜெயா (தி.மு.க)
5. பி.எம் முனிவேல் (தி.மு.க)
6. ஆர்.சுபாஷ்சந்திரபோஸ் (வி.சி.க)
7. சி.கே. சுப்பிரமணி (தி.மு.க)
8. கே.ஏ.குணசேகரன் (தி.மு.க)

**நகரமன்ற உறுப்பினர்கள் - நகர்புற பகுதி**

1. த.குப்பம்மாள் (தி.மு.க)
2. கே.நிஹாத்அஹமத் (தி.மு.க)
3. எஸ்.மோகன்ராஜ் (தி.மு.க)
4. ம.ஸ்ரீதர் (தி.மு.க) பேரூராட்சி உறுப்பினர்

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**

செயலாளர், திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (21.06.2023) சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 9வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யோகாசனம் பயிற்சி மேற்கொண்டு, நிகழ்ச்சியில் விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை ஆணையர் திருமதி.மைதிலி.கே.ராஜேந்திரன், இணை இயக்குநர் மரு. பார்த்திபன், அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் இணை இயக்குநர் மரு.மணவாளன், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்



திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் பகுதியில் சுற்றுலா மையம் அமையும் இடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி., திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ., நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் உடன் உள்ளனர்.



தி.மு.கழகத்தின் மூத்த முன்னோடி பல்வேறு நிலைகளில் கழகப் பணியாற்றி பெரியார் விருது பெற்றவரான சமீபத்தில் மறைந்த மிசா பி.மதிவாணன் அவர்களின் செம்பனார்கோவில் இல்லத்துக்கு சென்று அவருடைய திருவுருவப்படத்திற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு - 24 ஆம் தேதி

# தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் மருத்துவ முகாம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஜூன் 22 -

அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் 9வது சர்வதேச யோகா தினம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து, பேசினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், நேற்று (21.06.2023) சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 9வது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யோகாசனம் பயிற்சி மேற்கொண்டு, நிகழ்ச்சியில் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து துறைகளிலும் சிறப்பாக கலைஞர் நூற்றாண்டு விழா நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார். அந்த வகையில் தமிழ்நாட்டில் வருகின்ற 24.06.2023 அன்று ஒரே நாளில் அரசு மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் என்று 30 துறைகளை ஒருங்கிணைத்து பெரிய அளவில் மருத்துவ முகாம்கள் நடத்துவது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 100 மருத்துவ முகாம்கள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொறுத்தவரை 15 மண்டலங்கள் இருக்கின்றன. 15 மண்டலங்களில் ஏற்கெனவே 5 மண்டலங்களில் ஏற்கெனவே முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் சார்பாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள மண்டலங்களில் 10 இடங்களிலும், மற்ற மாவட்டங்களிலும் 90 இடங்களிலும் என்று ஒரே நாளில் 100 மருத்துவ முகாம்கள் வருகின்ற 24.06.2023 அன்று நடத்தப்படவிருக்கிறது. காலை தொடங்கி மாலை 5 மணி வரை இம்முகாம்கள் நடைபெறும். பொதுமக்கள் இம்முகாம்களில் பயன்பெறும் வகையில் பல துறைகள் ஒருங்கிணைத்து நடத்தப்படவிருக்கிறது. மேலும் காசநோய் கண்டறிவதற்கு டிஜிட்டல் எக்ஸ்ரே பொறுத்திய 28 வாகனங்களையும், தனியார் மருத்துவமனையில் உள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ உபகரணங்களை இந்த மருத்துவ முகாம்களில் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை ஆணையர் திருமதி.மைதிலி. கே.ராஜேந்திரன், இணை இயக்குநர் மரு.பார்த்திபன், அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் இணை இயக்குநர் மரு.மணவாளன், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; பா.ஜ.க.வுக்கு ஒருமுறை வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள் என்று ராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் சொல்லி இருக்காரே?

**போண்டி :** **ஆமாய்யா; மணிப்பூர்ல தீ எரியுற மாதிரி இங்கயும் பார்க்கவா?**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. கோவிந்தசாமி

### ஜுன் 22 (2002)



**கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**அறிஞர் அண்ணா அவர்களால் 'சாது' கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**